செ.வெ.எண்.11-2019 நாள்:09.10.2019

# பத்திரிக்கைச்செய்தி

விழுப்புரம் மாவட்டம் நெ.75.விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் 21.10.2019 அன்று நடைபெற உள்ளது தொடர்பாக 275 வாக்குச்சாவடிகளுக்கு அனுப்பப்பட வேண்டிய மின்னணு ஓட்டு பதிவு இயந்திரங்களை இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்திரவின்படி கணினி மூலம் குலுக்கல் முறையில் ஒதுக்கீடு செய்யும் பணி 09.10.2019 இன்று மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., நெ.75.விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி தேர்தல் பொதுப்பார்வையாளர் திரு.சினுவீரபத்ருடு,இ.ஆ.ப., ஆகியோர் தலைமையில் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் மற்றும் நெ.75.விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்கள் முன்னிலையில் நடைபெற்றது. இதன்படி நெ.75.விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதிக்கு தேவையான 344 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள்(BU), 344 மின்னணு வாக்கு எண்ணிக்கை இயந்திரங்கள்(CU) மற்றும் 358 வாக்களிப்பதை உறுதி செய்யும் இயந்திரம் (VVPAT) ஆகியவை கணிணி மூலம் குலுக்கல் செய்யப்பட்டு நெ.75.விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்.இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத்தேர்தல் முன்னிட்டு EVM Machine Randomization தேர்தல் பொதுப்பார்வையாளர் திரு.சினுவீரபத்ருடு.இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. மேலும் விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் சார்பில் வந்துள்ள பிரதிநிதிகள், அங்கீகரிக்கப்பட்ட கட்சி சார்ந்த பிரதிநிதிகள் முன்னிலையிலும் நடைபெற்றது.

இதனடிப்படையில் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதியில் 275 வாக்குச்சாவடி மையங்கள் உள்ளன. அனைத்து வாக்குச்சாவடி மையங்களுக்கும் Ballot Unit, Control Unit மற்றும் VVPAT போன்ற இயந்திரங்கள் Randomization செய்து கொடுக்கப்பட்டுள்ளது. 344 Ballot Unit, 344 Control Unit மற்றும் 358 VVPAT போன்ற இயந்திரங்கள் நடைபெறயிருக்கும் விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத்தேர்தலில் வாக்குப்திவிற்காக பயன்படுத்தப்படவுள்ளது. தேர்தலுக்காக எந்தந்த இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகிறது என்ற விவரத்திற்கான படிவத்தை வேட்பாளர்களின் சார்பில்

உள்ள பிரதிநிதிகளுக்கும், அங்கீகரிக்கப்பட்ட கட்சி சார்ந்த பிரதிநிதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. தற்போது நடைபெற்றது முதல் Randomization, இரண்டாவது Randomization ஆனது ஒருவாரத்திற்கு பிறகு நடைபெறும். அவற்றில் எந்தந்த இயந்திரங்கள் எந்தந்த வாக்குச்சாவடிக்கு அனுப்புவது என்று முடிவு செய்யப்படும்.

அதேபோல் விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத்தேர்தல் சம்மந்தமாக பறக்கும் படை மற்றும் நிலையான கண்காணிப்பு குழு மிக தீவிரமாக செயல்பட்டுவருகிறார்கள். இதுவரை நம் மாவட்டத்ததில் ரூ.10,85,600/- பணமாக பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. ரூ.10,35,120/- மதிப்பிலான மது மற்றும் பிற பரிசு பொருட்களாக பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இதுவரை ரூ.21,20,720/- மதிப்பில் பொருட்கள் மற்றும் பணம் பறிமுல் செய்யப்பட்டுள்ளது. மேலும் தேர்தல் நன்னடத்தை விதி மீறல் சம்மந்தமாக 47 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் கூடுதல் ஆட்சியர்(வருவாய்) திருமதி.ஸ்ரேயா பி. சிங் இ.ஆ.ப., உதவி ஆட்சியர்(பயிற்சி) திரு.வ.சிவகிருஷ்ணமூர்த்தி இ.ஆ.ப., நெ.75.விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் திரு.மு.சந்திரசேகர், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திரு.சி.ஜெயக்குமார், தனி வட்டாட்சியர்(தேர்தல்) திரு.வெ.சீனுவாசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்